பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மடல் 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 22 வியாழக்கிழமை (06 08 1992) UTHAYAN — A Lively National Tamil Daily மதி 252

# ஸ்ரீலங்கா கடற்படையினரால் தமிழகத்து மீனவர் கொலை!

## இந்திய நாடாளுமன்றத்தில் எம். பிக்கள் போர்க் கோலம்

புதுடில்லி, ஆக. 6

ஸ்ரீலங்கா கடற்படையினர் தமிழக மீனவர்களைக் கைதுசெய்து சித்திரவதை செய்வதாகவும், சில சமயங்களில் கொன்றுவிடுவதாகவும் நேற்று இந்திய நாடாளுமன்றத்தில் எம். பிக்கள் கண்டனம் தெரிவித்தனர்.

இந்த அடாத்துக்கும் அநியாயத்துக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும் என்றும்—

இது விடயத்தில் இந்திய அரசு விரைந்து நடவடிக்கை எடுத்துத் தமிழக மீனவர்களுக்கு ஏற்படும் இன்னல்களை நீக்கவேண்டும் என்றும்—

லோக சபை, ராஜ்ய சபை ஆகிய இரண்டு சபைகளிலும் தமிழகத்தைச் சேர்ந்த எம். பிக்கள் உரத்த தொனியில் வற்புறுத்தினர்.

மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பலில் வந்த ம. எண்ணெய் அகதி முகாம்களுக்கு

யாழ்ப்பாணம், ஆக. 6

"குமண" கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ள 41 'பரல்'கள் மண்எண்ணெய்யும் அகதி முகாம்களுக்கு வழங்கப்படவிருக்கின்றன.

யாழ். மாவட்டத்துக்கு அவசரமாக ஆயிரம் மண்எண்ணெய் 'பரல்'களை அனுப்புமாறு யாழ். அரச அதிபர் புனர்வாழ்வு அமைச்சைக் கோரியிருந்தார்.

ஆனால் 'குமண' கப்பலில் 41 'பரல்'கள் மட்டுமே அனுப்பப்பட்டுள்ளன.

போதுமான அளவு மண்எண்ணெய் வராததால், இவற்றை அகதி முகாம்களில் தங்கியுள்ளோருக்கு வழங்க ஏற்பாடாகியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (ஒ-3)

## தொடர்ந்து 3 ஆவது தினமாக புலிகள் அதிரடித் தாக்குதல்

### நானாட்டானில் நேற்று 4 படையினர் பலி

யாழ்ப்பாணம், ஆக. 6

மன்னார் மாவட்டம், நானாட்டானில் நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல் ஒன்றில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

அவர்களிடமிருந்து நான்கு நவீன ரகத் துப்பாக்கிகள்; உயர் வலு தொலைத்தொடர்பு சாதனம் ஆகியன உட்பட பல இராணுவத் தளபாடங்களைப் புலிகள் கைப்பற்றினர்.

நேற்று அதிகாலை 5-30 மணியளவில் நானாட்டான் முகாமில் இருந்து இருநூறு யார் தொலைவில் உள்ள பாடசாலை ஒன்றுக்கு தளைகளை அகற்றுவதற்காக முன்னேறி வந்த 10 பேர் கொண்ட இராணுவ அணி மீதே இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

சுமார் 5 நிமிட நேரம் நடத்தப்பட்ட இத் தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட ஏனையோர் காயங்களுடன் முகாமுக்குத் தப்பி ஓடினர்.

இத் தாக்குதல் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் தரப்பில் இழப்புகள் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு விடுதலைப் புலிகளினால் நடத்தப்பட்ட மூன்றாவது அதிரடித் தாக்குதல் இதுவாகும்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தபால் பொதிகள் வந்து சேர்ந்தன

யாழ். நகரப் பகுதியில் இன்று வெளியூர் தபால் விநியோகம் இடம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குமண கப்பலில் எடுத்து வரப்பட்ட தபால் பொதிகள் நேற்று மாலை யாழ். பிரதம தபாலகத்துக்கு எடுத்துவரப்பட்டன.

முன்னர் அறிவிக்கப்பட்டது போலன்றி இம் முறை கப்பலில் 463 தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

யாழ். செயலகத்துக்குக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கைதிகளை பார்க்க அனுமதி

கொழும்பு, ஆக. 6

தென்னிலங்கையில் உள்ள தடுப்பு முகாம்கள் மற்றும் சிறைச்சாலைகளில் வைக்கப்பட்டிருக்கும் வடக்கு-கிழக்கு அரசியல் கைதிகளை வாரத்தில் இருநாட்கள் உறவினர்கள் சென்று பார்க்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா தெரிவித்தார். (இ-3)

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

நானாட்டானில் நேற்றுக் காலை நடத்தப்பட்ட தாக்குதலில் இராணுவத்தினரிடம் இருந்து விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்களின் விவரம் வருமாறு:-

- ★ ஏ. கே. எல். எம். ஜீ. — 1
- ★ அதற்குரிய ரவைகள் — 330
- ★ அதற்குரிய மகஸீன் கோல்ஸர் — 1
- ★ மகஸின் — 1
- ★ ரி 81 ரகத் துப்பாக்கி — 3
- ★ அவற்றுக்குரிய மகஸின்கள் — 7
- ★ ரி 56 ரகத் துப்பாக்கி — 1
- ★ அதற்குரிய மகஸின்கள் — 3
- ★ உயர் வலு வயர்லெஸ் — 1
- ★ அதற்குரிய பட்டறி — 1
- ★ நடுத்தர ரவைகள் — 240
- ★ ஜே. ஆர். கிரனேட்டுகள் — 2
- ★ ஏ. கே. கோல் சர்கள் — 2
- ★ மழைக்கவசம் — 1
- ★ சப்பாத்து — ஒரு சோடி
- ★ தண்ணீர் தாங்கி — 1

(இ-5)

## அரசாங்கத்தினால் முஸ்லிம்களை ஒரு போதும் பாதுகாக்க முடியாது

### போரை நிறுத்த இயக்கம் வேண்டுமாம்

கொழும்பு, ஆக. 6

வடக்கு - கிழக்கு யுத்தத்தை நிறுத்த அரசை வலியுறுத்தும் இயக்கம் ஒன்றை நாடளாவிய ரீதியிலும், சர்வதேச மட்டத்திலும் நடத்த மக்கள் அமைப்புகள், அரசியல் கட்சிகள் ஆகியன நடவடிக்கை எடுக்க வேண்டும்.''

முற்போக்கு முஸ்லிம் முன்னணி என்ற அமைப்பு இக் கோரிக்கையை விடுத்துள்ளது.

இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு - கிழக்கு யுத்தத்தினால் முஸ்லிம் மக்கள் தினந்தோறும் பலியாகி வருகின்றனர். அரசினால் வடக்கு-கிழக்கு முஸ்லிம் மக்களை ஒரு போதும் பாதுகாக்க முடியாது. கடந்த சில வாரங்களாக நடைபெற்று வரும் சம்பவங்கள் இதனையே எடுத்துக் காட்டுகின்றன. யுத்தம் மேலும் தொடர்ந்தால் முஸ்லிம்கள் தொடர்ந்தும் பலியாவர்.

அண்மையில் கொழும்பில் நடந்த முஸ்லிம் தேசிய மகாசபையில் எமது அமைப்பு யுத்தத்தை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்தது— என்று உள்ளது. (ஒ-3)

## மக்கள் வங்கி கிளைகளிலுள்ள வெற்றிடங்களை நிரப்ப முயற்சி

யாழ்ப்பாணம், ஆக. 6

மக்கள் வங்கியின் யாழ். மாவட்ட கிளைகளில் எழுதுவினைஞர் தரத்தில் 24 வெற்றிடங்கள் உள்ளதாக தலைமையகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் கொழும்பு சென்றுள்ள மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் திரு. எஸ். அருளானந்தம் கொழும்பில் அதிகாரிகளுடன் பேசி, வெற்றிடங்களை நிரப்பும் அனுமதியை ஓரிரு தினங்களில் யாழ். அரச அதிபருக்கு அனுப்பி வைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பில் இருந்து அனுமதி கிடைத்ததும், வங்கியாளர் எழுதுனர் பரீட்சைகளில் சித்தியடைந்தோர் பட்டியலில் இருந்து இந்த வெற்றிடங்கள் நிரப்பப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## கொழும்பில் தங்கியுள்ள வெளியார் மீண்டும் பதியக் கோரிக்கை

### பொலீஸ் நிலையங்களில் படிவங்கள்

கொழும்பு, ஆக. 6

பிற மாவட்டங்களில் இருந்து வந்து கொழும்பில் தங்கியிருக்கும் அனைவரும் மீண்டும் பொலீஸ் நிலையங்களில் தங்கள் பெயர் விவரங்களை பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

வெளியாரைப் பதிவு செய்வதற்கான படிவங்களையும் பாதுகாப்பு அமைச்சு பொலீஸ் திணைக்களத்துக்கு வழங்கி உள்ளது.

இப் படிவங்கள் தற்போது சகல பொலீஸ் நிலையங்களுக்கும் விநியோகிக்கப்பட்டிருப்பதாக பொலீஸ் தலைமையக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பிற மாவட்டங்களில் இருந்து வந்து கொழும்பில் தங்கியிருக்கும் அனைவரும் தமிழ், சிங்கள, முஸ்லிம் என்ற பேதமின்றி தங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்றும் —

கடந்த வருடமும் இவ்வா

(5 ஆம் பக்கம் பார்க்க)

நீர்காத்து நிலம்காத்து வளிகாக்கும் போது
நீ[illegible] உடலுக்கு ஆயுளும் நூறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புங்குடுதீவு
கலட்டி அருள்மிகு ஸ்ரீ வரசித்தி
விநாயகர் தேவஸ்தானம்

# வரலக்ஷ்மி விரதம்

## 07-08-92 வெள்ளிக்கிழமை

மேற்படி விரதத்தைக் கொக்குவில் — பொற்பதிவீதி — ஸ்ரீ விநாயகப் பெருமான் ஆலயத்திலமைந்துள்ள, ஸ்ரீ மகாலக்ஷ்மி அம்பாள் சந்நிதானத்தில், காலை 9.00 மணிக்கு அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பித்து 12.00 மணி வரை அனுஷ்டிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**மாலவன் மார்பிலுறையும் மங்கலக் கமலச் செல்வியின் அருள் பெற்றுய்ய அனைவரையும் அழைக்கின்றோம்!**

குறிப்பு [உற்சவ வைபவத்தில் பி. ப. 4.00 மணி—6.00 மணி வரை உபயம் திரு. நச்சினார்க்கினியார் குடும்பத்தினருடையதாகும்.]

புங்குடுதீவு - கலட்டி - ஸ்ரீவரசித்தி விநாயகர்
ஆலய தர்மகர்த்தா-தேவஸ்தான - பரிபாலன
சபையினரின் கட்டளைப்படி
ஸ்ரீவரலக்ஷ்மி விரத உபயகாரர்கள்

புங்குடுதீவு,
06-08-92. [22054]

---

எழுதுநர் தரங்களுக்கும், அதனோடிணைந்த தரங்களுக்கும் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான

## போட்டிப் பரீட்சை - 1992

மேற்படி பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்கள் **07-08-1992** வெள்ளி காலை **9.00** மணியளவில் ஆரம்பமாகின்றன.

பாடநெறிகள்

1. தமிழ் 2. கணக்கு வைத்தல்
3. நுண்ணறிவு

விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்!

நிர்வாகி,
**மொடேர்ன் எடியுகேசன் சென்ரர்,**
நெல்லியடி, கரவெட்டி. [22051]

---

# நன்றி நவிலல்

## தாமோதரம்பிள்ளை தங்கராஜா

தாமோதரம்பிள்ளை தங்கராஜா அவர்களின் மரணச் சடங்கின் போது கலந்து ஆறுதல் கூறியோருக்கும், மலர்வளையங்கள் சாத்தியோருக்கும், மற்றும் பல் வேறு வழிகளில் உதவி புரிந்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

ரட்ணவாசா,
வட்டு கிழக்கு,
வட்டுக்கோட்டை. [சி 3116]

---

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



இப்புவியில்:
**26-09-1947**

✱

இறையடியில்:
**06-08-1988**

## திருமதி லீலாவதி குகபாலன்

(ஆசிரியை)

உங்கள் ஆத்ம சாந்திக்காக நல்லூர் முருகனை பிரார்த்திக்கின்றோம்.

கணவன், தந்தை,
மாமி, சகோதரர்கள், உறவினர்கள்.

பிரபா வாசம்,
உசன்,
மிருசுவில். [22060]

---

# செஞ்சோலை இசைமாலை

யாழ்ப்பாணம், ஆக. 6

செஞ்சோலை இசைமாலை நிகழ்ச்சி இன்று சுன்னாகம் கந்தரோடையிலும், நாளை மருதனார்மடத்திலும் இடம் பெறும்.

கந்தரோடையில் — ஸ்கந்த வரோதயக் கல்லூரியிலும், மருதனார்மடத்தில் — இராமநாதன் கல்லூரியிலும் இசைமாலை நடைபெறும். இரவு 8.30 மணிக்கு நிகழ்ச்சி ஆரம்பமாகும். [ஒ]

# 2 ஆவது தொகுதி வினாத்தாள்கள்

யாழ்ப்பாணம், ஆக. 6

தற்சமயம் நடைபெற்று வரும் ஜி. சீ. ஈ. [உயர்தர] பரீட்சைக்கான 2 ஆவது தொகுதி வினாத்தாள்கள் இன்று பலாலிக்கு எடுத்து வர ஏற்பாடாகியுள்ளதாக நேற்று மாலை கொழும்பில் இருந்து தகவல் கிடைத்தது.

வினாத்தாள்கள் இன்று பலாலி வந்து சேரும் பட்சத்தில் நாளை 'குமண' கப்பல் மூலம் அவை பருத்தித்துறைக்கு எடுத்து வரப்படும் என தெரிவிக்கப்பட்டது. [இ-3]

---

# பாரதி

சித்தன்கேணி

★ பொருளியல் —
**Mr. மகேந்திரன்**
சனி — ஞாயிறு
**A/L 93**
சந்தைச் சமநிலை
3-00 p. m.
பகுதி II
வரவு செலவுத் திட்டம்
5-00 p. m.
**A/L 94**
கேள்விக் கோட்பாடு
4-00 p. m.

★ அளவையியல் —
**Mr. சோதிலிங்கம்**
சனி — ஞாயிறு
**A/L 93**
குறியீட்டு அளவையியல்
2-00 p. m.
பகுதி II
விஞ்ஞான முறை
4-15 p. m.
**A/L 94**
வென்வரைபடம்
3-00 p. m.
குறியீட்டு அளவையியல்
5-15 p. m.

★ வர். நிதியம் —
**Mr. பசில்**
செவ்வாய் — வியாழன்
**A/L 94**
வியாபாரம்
3-00 p. m.
**A/L 93**
சந்தைப்படுத்தல்
5-00 p. m.

★ கணக்கியல் —
**Mr. யோகராஜா**
செவ்வாய் — வியாழன்
**A/L 93**
தொங்கற் கணக்கு
3-00 p. m.
**A/L 94**
முடிவுக் கணக்குகள்
4-00 p. m.

புதிய பிரிவு
**A/L 93, 94**
★ தமிழ் — திரு. பாலா
★ இந்துநாகரிகம் —
திருமதி அருந்நங்கை
[சி/2493]

---

# நாய்களுக்கு நோய்த்தடுப்பூசி போடும் இடங்கள்

யாழ்ப்பாணம், ஆக. 6

யாழ். மாநகரப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி போடும் 3 ஆம் கட்ட நடவடிக்கையின் இரண்டாம் சுற்று நாளையுடன் முடிவடைகிறது.

இன்றும், நாளையும் தடுப்பூசி போடப்படவுள்ள இடங்களும் நேரங்களும் வருமாறு:-

**வியாழக்கிழமை**

★ காலை 8.00 — 10.00 மணி வரை:- அரியாலையில் கண்டி வீதி — நெடுங்குளம் வீதிச் சந்தி, கச்சேரி கிழக்கு ச. ச. நிலையம்—

★ முற்பகல் 10.30—12.30 மணி வரை:- அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம், அரியாலை சனசமூக நிலையம், புங்கன்குளம்—

★ பிற்பகல் 2.00 — 4.00 மணி வரை:- நல்லூர் செங்குந்த சந்தை, மூத்தவிநாயகர் சனசமூக நிலையம்.

**வெள்ளிக்கிழமை**

காலை 8.00 — 10.00 மணி வரை:- கொட்டடியில் உள்ள மாநகர மகப்பேற்றுநிலையம், பலாலி வீதியில் பரமேஸ்வரா சந்தி—

★ முற்பகல் 10.30— 12.30 மணி வரை:- நாவலர் வீதியில் நாவலர் கலாசார மண்டபம், வேம்படி வீதி — மார்ட்டின் வீதிச் சந்தி —

★ பிற்பகல் 2.00 — 4.00 மணி வரை:- நாவலர் வீதியில் அரச மிருக வைத்தியசாலை, கொய்யாத்தோட்டத்தில் கலைச்சுடர் சனசமூக நிலையம். [இ-5]

# இணைப்பு குறித்து ஆராய்வு

5 தமிழ் கட்சிகளும் 2 முஸ்லிம் கட்சிகளும் கடந்த திங்களன்று கூடி வடக்கு - கிழக்கு இணைப்புக் குறித்து ஆராய்ந்தன. [இ]

# அதிபர்களுக்கான நேர்முகப் பரீட்சை

இலங்கை அதிபர் சேவையின் முதலாம் தர அதிபர் பதவிக்கு போட்டிப் பரீட்சை மூலம் தெரிவான 21 பேருக்கான நேர் முகப் பரீட்சைகள் எதிர் வரும் 17 ஆம் திகதி காலை 9 மணிக்கு கொழும்பில் நடைபெற உள்ளன.

நேர் முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் அதற்கான பத்திரங்களை யாழ். கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்று பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார். [இ-3]

[மற்றொரு செய்தி 3 ஆம் பக்கத்தில்]

---

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
| --- | --- |
| 07 | 06 |
| — | — |
| 06 | 08 |
| — | — |
| 1941 | 1990 |

அமரர்

## அந்தோனிப்பிள்ளை வேதநாயகம்


(பவளம்)

இவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:
— குடும்பத்தினர்.

சில்லாலை தெற்கு,
பண்டத்தரிப்பு. [22052]

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
| --- | --- |
| 31 | 07 |
| — | — |
| 05 | 07 |
| — | — |
| 1916 | 1992 |

## அமரர் கந்தையா சாந்தலிங்கம் (சாவன்னா)

வேலணைமேற்கை பிறப்பிடமாகவும் யாழ். கொட்டடியை வசிப்பிடமாகக் கொண்டவருமான, கந்தையா சாந்தலிங்கம் (சாவன்னா) அவர்களின் திடீர்மறைவு எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறையாசியை வேண்டிநிற்கும்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

[22058]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருப்பத்துக்கு மாறாகவே அகதிகளை அனுப்பினர்!

## ஐ. நா. தூதரகம் விசாரணை

கொழும்பு, ஆக. 6 கடந்த திங்கட்கிழமை தமிழகத்தில் இருந்து திருமலைக்கு விமானம் மூலம் திருப்பி அனுப்பப்பட்ட 132 இலங்கைத் தமிழ் அகதிகளும், தமது விருப்பத்துக்கு மாறாகத் திருப்பி அனுப்பப் பட்டதாகத் தெரிவித்தனர்.

இவ்வாறு கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை — தாயகம் திருப்பி அனுப்பப் பட்ட தமிழ் அகதிகள் தமது விருப்பத்துக்கு மாறாகத் திருப்பி அனுப்பப்பட்டனரா என்பது குறித்து அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் விசாரணைகளை நடத்தி வருவதாக மேற்படி அமைப்பின் அதிகாரி ஒருவர் நேற்று முன்தினம் கொழும்பில் தெரிவித்தார். [ஒ-த]

## மட்டு., அம்பாறைக்கு சுவிஸ் தூதுவர் விஜயம்

### அகதிகள் நிலைமையைக் கேட்டறிந்தார்

அம்பாறை மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களின் நலன்களை கவனிக்கும் பொறுப்பை சுவிஸ் தூதரகம் பொறுப்பேற்றுள்ளது.

இலங்கைக்கான சுவிஸ் தூதுவர், அதிகாரிகள் சகிதம் அம்பாறைக்கு விஜயம் செய்து அகதிகளின் நிலை குறித்து கேட்டறிந்தார்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்துக்குச் சென்ற சுவிஸ் தூதுவர், தமிழ் அகதிகள் தங்க சுவிஸ் அரசு அமைத்த கட்டடங்களை திறந்து வைத்தார். அகதிகளுக்கான பல புனர்வாழ்வுத் திட்டங்களையும் அவர் ஆரம்பித்து வைத்தார். [ஒ-3]

## கடந்த மாதம் மட்டும் 803 பேர் பலியாகினர்!

கடந்த ஜூலை மாதத்தில் நாட்டில் 803 பேர் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

வடக்கு -கிழக்கு மாகாணத்தில் மட்டும் வன்செயல்களினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 692 ஆகும்.

ஏனைய மாகாணங்களில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 111 ஆகும். [த-எ]

# அதிபர் வெற்றிடங்களை நிரப்ப இன்று முதல் நேர்முகப் பரீட்சை

## கொழும்பில் ஏற்பாடுகள் பூர்த்தி

கொழும்பு ஆக. 6 நாடு முழுவதிலும் அரச பாடசாலைகளில் வெற்றிடங்களாக இருக்கும் 4 ஆயிரத்து ஐநூறு அதிபர் தர வெற்றிடங்களை விரைவில் நிரப்புவதற்கான நிரந்தர நியமனங்களை கல்விச்சேவைகள் ஆணைக்குழு வழங்கவுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தரம் I, தரம் II, தரம் III அதிபர்களுக்கான இந்த வெற்றிடங்களை நிரப்ப ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு வழங்குவதற்கான போட்டிப் பரீட்சை கடந்த வருடம் ஆகஸ்டில் நடத்தப்பட்டது என்றும் —

அந்தப் பரீட்சை முடிவுகளின்படி பரீட்சார்த்திகளைத் தெரிவு செய்வதற்கான இறுதி ஒழுங்குகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டு விட்டன என்றும் — கல்விச்சேவைகள் சபையின் உதவிச் செயலாளர் திரு. என். டி. பந்துசேனா தெரிவித்திருக்கிறார்.

அதிபர் தரம் ஒன்றுக்கு நியமிக்கத் தேவையான தராதரத்தை உடைய ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சையை இன்று 6ஆம் திகதி முதல் தொடர்ந்து 7ஆம், 9ஆம், 10ஆம், 17ஆம் திகதிகளில் நடத்தவும் —

அவர்களுக்கான நிரந்தர நியமனங்களை எதிர்வரும் 25ஆம் திகதி வழங்குவதெனவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் — அவர் சொன்னார்.

அதிபர்கள் தரம் இரண்டில் ஆயிரத்து 750 இடங்களும், அதிபர்கள் தரம் மூன்றில் 2 ஆயிரத்து 400 இடங்களும் தற்போது காலியாக உள்ளன என்றும் — தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகளுக்கு 1991 ஜனவரி முதல் திகதியில் இருந்து நியமனங்கள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை — தற்போது பதில் அதிபர்களாகக் கடமையாற்றும் சுமார் 2 ஆயிரத்து 500 பேர் நிரந்தரமாக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [அ-5]

## பீற்றர் ஷோக் கருத்துரை

யாழ்ப்பாணம், ஆக. 6 சுவீடன் உப்சால் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் பீற்றர் ஷோக் இன்று மாலை 2. 30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில், ''சுவீடன் பல்கலைக்கழகக் கல்வி'' என்ற தலைப்பில் கருத்துரை வழங்குவார்.

இதே சமயம் —

பேராசிரியர் பீற்றர் ஷோக் ''பன்முறைச் சூழலில் திருச்சபையின் பணி'' என்னும் தலைப்பில் நாளை மறுதினம் சனிக்கிழமை சுண்டுக்குளியிலுள்ள வை. எம். சி. ஏ. மண்டபத்தில் கருத்துரை வழங்கவுள்ளார். [ஒ-3]

## நல்லூரில் புற்றுநோய் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஆக. 6 நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவ காலத்தில் இந்த வீதிக்குத் தெற்குப் புறமாக, புற்றுநோய் சம்பந்தமான தகவல் நிலையம் ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

வடமாகாண புற்றுநோய்த் தடுப்புச் சங்கம், மேற்படி நிலையத்தை நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்குத் திறந்து வைக்க உள்ளது.

நாளை தொடக்கம் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை தினமும் இந்நிலையத்தில் புற்றுநோய் சம்பந்தமான கண்காட்சி காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறும். [ந]


# பாரதிதாசன்

கல்வி நிறுவனம்
(BECON)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
வெளிவாரிப் பட்டப்படிப்புகள்
**G. A. Q; 1st in Com.**
**1992 Sep./Oct.** பரீட்சைக்குரிய
மீட்டல் மாதிரி வினா - விடை வகுப்பு

★ பொருளியல் ★
S. வரதராஜன்
B. A. (Hons)

ஆரம்பம்: 10 - 08 - 1992 திங்கள்
★ நேர அட்டவணையை அலுவலகத்தில் பெறவும்.

பேராதனைப் பல்கலைக்கழக
வெளிவாரிப் பட்டப் படிப்பு
**B. A. வகுப்புகள்**

★ பொருளியல் ★
S. வரதராஜன்
B. A (Hons)

ஆரம்பம்: 08 - 08 - 1992 சனி
★ நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

[சி-3109]



# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**93** கலை, வர்த்தக வகுப்புக்கள்
08 - 08 - 1992 காலை 8 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. கலாகரன் |
| வர்த்தகம் | — | திரு. தேவா |
| கணக்கியல் | — | திரு. வன்னியசிங்கம் |
| அளவையியல் | — | திரு. சுப்பிரமணியம் |
| தமிழ் | — | திரு. குழந்தை |
| இந்துசமயம், இந்துநாகரிகம் | — | திரு. காரை சுந்தரம்பிள்ளை |
| புவியியல் | — | திரு, குணராசா |
| அரசியல் | — | திரு. ஜெயகாந்தன் |
| வரலாறு | — | திரு. சிறீதரன் |

[சி-3111]



நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த

# ★ இசை மாலை ★

இடம்: ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, கந்தரோடை. இன்று 06-08-1992
இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம். நாளை 07-08-1992
காலம்: இரவு 8-30 மணி
நுழைவுச் சீட்டுக்கள்:
ரூபா 100-/ இருவருக்குரியது.
ரூபா 50/-, 25/- தனி ஒருவருக்குரியது.
ரூபா 10/- பாடசாலை மாணவர்களுக்குரியது.
ஏனைய இடங்களுக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

''செஞ்சோலை'' நிர்வாகத்தினர்.

[சி-3015]



# நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

**A/L 93**
★ பங்குடமை ★
ஆசிரியர்:
திரு. ஸ்ரீ
ஆரம்பம்:
08 - 08 - 1992
காலை 8 — 10


## ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணகம்: 15 — 01 — 1933
விண்ணகம்: 19 — 07 — 1991

அமரர்
**சோமஸ்கந்தசாமி இராசேந்திரம்**
(ஓய்வுபெற்ற உதவி வைத்திய அதிகாரி R. M. P.)

அன்பான அப்பாவே! ஆருயிர் அப்பாவே!
கூடி வாழ்ந்த குடும்பமதில் குதூகலித்திருந்திரே
ஈராறு மாதங்கள் இங்குநீர் இல்லையென்று
கூறமுடியவில்லை குமுறுதெங்கள் இதயமெல்லாம்

கண்ணான கணவனாய் இருந்து
கடமைகள் பல புரிந்து
அன்பான அப்பாவாய் இருந்து
பண்பான பழக்கங்கள் தந்து
பள்ளியில் படிக்க வைத்தெம்மை
பட்டங்கள் பல பெறவேண்டி
திட்டங்கள் பல போட்டீர் - அது
கட்டடங்கள் ஆகுமுன்பே கண்களை
முடியதென்ன!
ஆறாது துயரமப்பா ஆண்டுகள் பல சென்றாலும்
ஓயாதுரைப்போம் உங்கள் நாமத்தை-
ஆத்மசாந்திக்காக;

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரிவுத்துயரில் மூழ்கி விட்ட;
அன்பு மனைவி, மக்கள், தாய்,
அண்ணன், மைத்துனர்,
மைத்துனிமார், மற்றும்
உற்றார், உறவினர்கள்.

7ஆம் கட்டை,
சங்கானை.

[22087]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்லூர் கோயில் முன் வாசலில் அமைந்திருக்கும் எமது அண்ணா கோப்பி நிலையத்தில் உங்களுக்குத் தேவையான குரக்கன் மா, ஆட்டா மா, அரிசி மா, உழுந்து மா, மிளகாய்த்தூள், கோப்பித் தூள், தேயிலை, இனிப்பு வகைகள் ஆகியவற்றை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளுங்கள், அண்ணா தொழிலகம், இணுவில்.

[சி-2988]

நீமியா உரம் நெற்பயிருக்குச் சிறந்த அடிக்கட்டுப் பசளை எனக் கண்டறியப் பட்டுள்ளது. வளர்ச்சியின் போது பூச்சி, புழுக்களிலிருந்து பாதுகாப்பு, அதிகரித்த விளைச்சல். கிலோ ரூபா 15/-, 20 கிலோ பக்கெற் ரூபா 260/-. அண்ணா கோப்பி கடைகளிலும் கிடைக்கிறது. "மிலக்வைற்"

[சி-3016]

தாவடி, மானிப்பாய் வீதியில் பெரிய வீடு நாலரைப் பரப்பில் விற்பனைக்குண்டு. வாங்குபவர் நேரில் வரவும். பாலசிங்கம், இல. 01, செம்மணி வீதி, நல்லூர் முத்திரைச் சந்தை. [சாமுவேல் தொழிற்சாலையிலிருந்து இரண்டாவது வீடு]

(22043)

### வீடு தேவை

யாழ். மாநகரசபைப் பகுதியில், பகுதி வீடு அல்லது இரு அறைகள் வாடகைக்குத் தேவை. திருநெல்வேலி, கொக்குவில் பகுதிகள் விரும்பத்தக்கது. மகாதேவன், பலாலி ஆசிரியர் கலாசாலை, திருநெல்வேலி. (5228)

### புலமைப்பரிசில் பரீட்சை

சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத்தரும் நிறுவனத்தால் வாரந்தோறும் நடத்தப்படும் புலமைப்பரிசில் மாதிரிப்பரீட்சை 09-08-92 ஞாயிறு மு. ப. 7 - 00 — மு. ப. 9-45 ஆகிய நேரங்களில் நடைபெறும். பதிவு செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (22045)

ஆண்டு 4, 5 களான புலமைப்பரிசில் மாதிரிப்பரீட்சை எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் (8-8-92, 9-8-92) காலை 9-15 மணிக்கு நடைபெறும். அத்துடன் ஆண்டு 5 இற்கான புலமைப்பரிசில் வகுப்புகள் இலவசமாக நடத்தப்படும். நாவலர் கல்வி கழகம், நாவலர் ஒழுங்கை, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(22050)

### வகுப்புகள்

City and Guilds of London Institute Part II Quantity Surveying - 1993 வகுப்புகள் 05 - 08 - 1992 புதன்கிழமை காலை 6-30 — 8-30 ஆரம்பமாகின்றன. Measurement திங்கள் - புதன் Estimating and Analysis of Prices செவ்வாய்-வியாழன். த. விசாகபதி, பாடசாலை ஒழுங்கை, தாவடி. (21989)

### ENGLISH COURSE

ஒருங்கமைந்த 3மாத ஆங்கிலப் பயிற்சி English Grammar, Spoken English By Kandasamy, 87. திருநெல்வேலி றோட், [பாலத்திற்கு அண்மையில்] கொக்குவில்.

(22042)

---

# வெளிவந்துவிட்டது

## ★ வேதங்கள் ★

A/L., G. A. Q, B. A. மாணவர்களுக்குரிய நூல்.

ஆசிரியர்; நெல்லண்டை அம்மன் பிரதம குரு

தி. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் B. A. (Cey.)

கிடைக்கும் இடங்கள்:

புதிய உயர் கல்லூரி - ஆரியகுளம் சந்தி, யாழ்.

ஸ்ரீலங்கா புத்தகசாலை - யாழ்ப்பாணம்.

பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம்.

[22039]

---

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 18 — 04 — 1923

மறைவு: 06 — 08 — 1982

ஆண்டவனடி இணைந்த

## திருமதி எமிலி பவளம் அந்தோனிப்பிள்ளை

இரக்கமுள்ள யேசுவே!

எங்கள் மத்தியில் வாழ்ந்து, பண்பிலும் பாசத்திலும் எமக்கு முன் மாதிரியாக இருந்து. உயிர்நீத்த தியாகத்தின் சுடராகிய அடியாளை உம்மோடு நித்திய வாழ்வில் இணைத்துக் கொள்ளும்.

பிரிவின் நினைவில்;
குடும்பத்தினர்.

51, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

(21873)

---

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா? கேட்டுப் பாருங்களேன்! ஜாதகக் குறிப்பு, கைரேகை, எண் சோதிடம், விவாகப் பொருத்தம் பார்க்க தொடர்பு: தினமும் காலை 8 முதல் 12 வரை த. சிவானந்தன் பிரபல சோதிடர், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு, கிளை; ஆனந்தா சோதிட நிலையம், 249, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். நேரம் - தினமும் பி. ப. 2 முதல் 6 வரை.

[22007]

---

## New Science Academy

Jaffna.

## 93 A/L

CHEMISTRY
ORGANIC
IN ORGANIC

By — திரு. சண்
[B.Sc.]

SAT, SUN, TUE, THU.
6-00 — 8-00

ஆரம்பம்:
06 — 08 — 1992

[சி-3115]

---

## O/L 92

### PAPER CLASSES

கடந்த 5 வருட O/L பரீட்சை வினா - விடை வகுப்புக்கள்

ஆரம்பம்:
06—08—1992
[இன்று]
காலை 9-00 மணி

குறிப்பு: விடுமுறை காலமாக இருப்பதால் செவ்வாய், வியாழன் நாட்களில் காலை 9-00 — 1-00 மணி வரை வினா-விடை வகுப்புக்கள் நடைபெறும்.

O/L பகல் நேர, மாலை நேர மீட்டல் புதிய பிரிவுகள் நடைபெறுகின்றன.

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

[சி-3013]

---

## கீன்
## கல்வி நிலையம்

திருநெல்வேலி.

## A/L 93

### பொருளியல்

S. வரதராஜன்
B.A. (Hons)

★ தேசிய வருமானம்
★ வரவு-செலவுத் திட்டம்

ஆரம்பம்:
09-08-1992
[ஞாயிறு]

★ வாரத்தில் 5மணித்தியால வகுப்பு
★ விடுமுறை காலத்தில் மேலதிக வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

---

# விஞ்ஞான வகுப்புகள்

ஆண்டு 6 முதல் ஆண்டு 10 வரை
விஞ்ஞான பாடம்
தனி ஒருவருக்கோ அல்லது சிறு குழுக்களுக்கோ
வீட்டில் வந்து கற்பிக்கப்படும்,

தொடர்புகளுக்கு:

| | |
|---|---|
| New Science Academy, | New Education Centre, |
| யாழ்ப்பாணம். | சங்கரத்தை வீதி, |
| [சி-3114] | வட்டுக்கோட்டை. |

---

# C. C. A. யாழ்ப்பாணம்
## கலை, வர்த்தகக் கல்லூரி

வெலிங்டன் சந்தி அருகாமை

# A/L 93

## வார இறுதி மாலை நேர வகுப்புகள்

| | | |
|---|---|---|
| பொருளியல் 2 — 3 | — | திரு. உதயன் (செல்மதி நிலுவை) |
| கணக்கியல் 3 — 4, 4 — 5 | — | திரு. ஸ்ரீ (ஒற்றைப் பதிவு, கம்பனி) |
| வர்த்தகம் 5 — 6 | — | பிரபல ஆசிரியர் (பகுதி II) |
| அளவையியல் 12 — 1 | — | திரு. சயந்தன் (குறியீட்டு அளவையியல்) |
| புவியியல் | — | திரு வேலாயுதபிள்ளை (அபிவிருத்தி புவியியல்) |
| இந்து நாகரிகம் 1 — 2 | — | திரு. ஜோதிஸ்வரன் |
| தமிழ் | — | திரு. குழந்தை |
| அரசியல் | — | திரு. பஞ்சாட்சரம் |
| கிறிஸ்தவம் | — | திரு. அமலதாஸ் |

ஆரம்பம்: 08 - 08 - 1992
(சனி) மாலை 2 மணி

[இ-2996]

---

# வெற்றிடம்

## பிரதேசப் பணிப்பாளர்
# அகில உலக கெயர்

**பொறுப்புக்கள்:**

கிராமிய அபிவிருத்தித் திட்டங்களைத் திட்டமிடுதல், நிர்வகித்தல், நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல்; வரவுசெலவுத் திட்டம் உட்பட காரியாலய கணக்குகளையும், நிதியையும் நிர்வகித்தல்; காரியாலய நிர்வாகம், மற்றும் திட்டங்களை நிர்வகித்தல்; பிரதேசத்தின் சரியான திட்ட நிகழ்வுகளையும், முன்னேற்றத்தையும் உரிய நேரத்தில் அறிவித்தல்; அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் தொடர்பு; பணியாளர்களை நிர்வகித்தல்; பிரதேசங்களில் நடைமுறைப் படுத்தப்படவிருக்கும் புதிய திட்டங்களை உருவாக்கல்; வாகனங்களின் நடமாட்டம் பற்றியும், அவற்றின் பராமரித்தலையும் நிர்வகித்தல்; கெயர் ஸ்தாபன பிரதான பிரதிநிதியாக அப் பிரதேசத்தில் சேவையாற்றல்.

**தகைமைகள்:**

மேற்படி வேலைகளில் 5—10 வருட அபிவிருத்தி/நிர்வாக கடமைகளில் அனுபவம். இத்துறையில் அனுபவம் வாய்ந்த பட்டதாரியாக இருத்தல். ஆங்கிலத்திலும், தமிழிலும் பேச, எழுதக் கூடிய நல்ல தகைமை இருத்தல், சிங்களத்தில் வேலை செய்யக் கூடிய ஆற்றல் உதவியாக இருக்கும்.

**பொது:**

சம்பளமும் இதர சலுகைகளும் தகுதி, அனுபவம் திறமைக்கேற்ப வழங்கப்படும். பெண்களும் விண்ணப்பிக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

விண்ணப்பங்கள் யாவும் உறவினரல்லாத இரண்டு நடுவர்களின் பெயரோடு, 'ஆளணி/நிர்வாக உத்தியோகத்தர், அகில உலக கெயர், கொழும்பு' இற்கு அனுப்பி வைப்பதற்காக 20-08-1992 அன்று அல்லது அதற்கு முன்னதாக கீழ்வரும் முகவரியில் எம்மால் பெற்றுக் கொள்ளப்படும்;

## அகில உலக கெயர்,

15, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

[22036]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### கொலைக் கட்டணம்

ஸ்ரீலங்கா இராணுவத்தின் அளவு — உருவம் — கடந்த ஐந்து வருடங்களில் உப்பிப் பெருத்து விட்டது! நவீன ஆயுதங்கள் என்றும் அதிகரித்த ஆளணியினர் என்றும் நாளொரு அளவும் பொழுதொரு பருமனுமாக அது ஊதிப் புடைக்கிறது! அதுவும் வடக்கு - கிழக்கு யுத்தம் தொடங்கப்பட்ட கடந்த இரண்டு வருடங்களில் அது மதாளித்து, இராட்சதப் பூதமாக வளர்ந்து விட்டது!

அதன் காரணமாக இராணுவத்துக்கான செலவு வான் முகட்டைத் தொடும் அளவுக்கு உயர்ந்து வருகிறது. இராணுவத்தின் வளர்ச்சிக்கும் அதற்கான செலவுக்கும் கட்டுப்பாடோ உச்சவரம்போ இல்லை.

இப்போதும் கூட, விடுதலைப் புலிகளை பலவீனப் படுத்த முடியாத நிலையில், புதிய கனரக ஆயுத தளபாடங்கள், நவீன விமான அணிகள், பெரும் யுத்தக் கப்பல்கள் வாங்குவதற்கு என்று இராணுவம் அரசிடம் பணம் கேட்டுக் கொண்டிருக்கிறது.

இராணுவத்துக்கு அடிமையாகிவிட்ட அரசு, மக்களுக்கு உணவு போடுவதற்குப் பணம் இல்லாவிட்டாலும், இராணுவச் செலவுக்கு எங்கிருந்தாவது பணத்தைத் தோண்டித் கொடுத்து வருகிறது!

நிதிவளம் குன்றிய அரசு பணம் விழுங்கி இராணுவத்துக்குத் தீனி போடுவதற்காக மக்களை எல்லா வகைகளாலும் வதைக்கிறது. அந்த வதைப்புகளில் பாதுகாப்பு வரியும் ஒன்று.

சரி, தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை ஒடுக்குவதற்காகச் சிங்களவரிடம் வரி அறவிடுவது அவர்களைப் பொறுத்தது. சிங்களவரும் அவர்களது அரசாங்கமும் பட்ட பாடு!

ஆனால் தமிழர்களைக் கொல்வதற்கும், அவர்களின் உரிமைகளை நாசமாக்குவதற்கும், அவர்களின் உரிமைப் போராட்டத்தை முறியடிப்பதற்கும் தமிழர்களிடமே பாதுகாப்பு வரி அறவிடுவதை அனுமதிக்கலாமா? தமிழர்களை அழிப்பதற்கு அவர்களிடமே பணம் வசூலிக்க அரசுக்கு என்ன துணிச்சல்! அதற்கு இடம் கொடுத்தால் தமிழர்கள் ஏமாந்த சோணகிரிகள் ஆகிவிடுவர்!

தமிழர்கள் அரசுக்கு எந்த வரியையும் செலுத்தக் கூடாது. அதனை உணராது கொடுத்தால் தன்னைக் கொல்வதற்கு தானே கட்டணம் செலுத்திக் கூலிப் படையை அமர்த்துவது போலாகும்.

1983—1987 காலப்பகுதியில் இராணுவம் அழித்த வீடுகளை திரும்பக் கட்டுவதற்கும், சேதப்படுத்திய வீடுகளை திருத்துவதற்கும் வங்கிகள் வழங்கிய கடனுக்கான வட்டிக்கும் பாதுகாப்பு வரியாம்!

இது, தானம் செய்வதாகக் காட்டிக்கொண்டு ஒருகையால் கொடுத்துவிட்டு, அடுத்த கையால் தட்டிப்பறிக்கும் பாவம் நிறைந்த அட்டூழியமாகும். ஒருவனைக் கொலை செய்ய அவனைப் பயமுறுத்தி அவனிடமே பணம் பறிப்பது போலுமாகும் அதற்கு இடங் கொடுக்கலாகாது.

இது விடயத்தில் அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை. தமிழர்களின் வரிப்பணத்தில் இருந்து தான் கடன் வழங்கப்பட்டது. அந்தக் கடனைக் காரணம் காட்டி தமிழர்களைக் கொல்வதற்கு பணம் அறவிடப் படும் என்று அப்போது தெரிவிக்கப்படவில்லை. எனவே புனர்வாழ்வுக் கடன்களுக்கு பாதுகாப்பு வரி வட்டியை செலுத்தாமல் எல்லோருமாகச் சேர்ந்து ஓர் இயக்கத்தையே நடத்த வேண்டும். அப்போது தான் தமிழர்களின் துணிச்சல் நிரூபிக்கப்படும்.

# யாழ். குடாவில் 2,000 குழந்தைகள் போஷாக்கின்றி இறக்கும் அபாயம்

## கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 4 பேர் மரணம்

யாழ்ப்பாணம், ஆக. 6

யாழ். குடாநாட்டில் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்ட சுமார் ஆயிரத்து 500 முதல் இரண்டாயிரம் வரையான குழந்தைகள் இறக்கும் தறுவாயில் இருப்பதாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. போஷாக் கின்மையால் பாதிக்கப்பட்டவர்கள் என இனங்காட்டப்பட்ட குழந்தைகளில் நால்வர் கடந்த ஒரு மாதத்தில் இறந்துள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

யாழ். குடாநாட்டில் போஷாக்கு இன்மையால் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளமை பல ஆய்வுகளில் இருந்து உறுதியாகியுள்ளது. போஷாக்கு இன்மையால் பாதிக்கப்பட்ட குழந்தைகளாக இனங்காணப்பட்ட 1500 முதல் 2000 வரையான குழந்தைகள் தகவல் இல்லாமலேயே இறந்து கொண்டிருக்கிறார்கள்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் போஷாக்கு இன்மையால் பாதிக்கப்பட்டவர்களாக இனங்காணப்படும் குழந்தைகளுக்கான போஷாக்கு புனர்வாழ்வு நிலையம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. இந் நிலையத்துக்கென ஒரு மாத காலத்துக்கு முன்னர் அடையாளம் காணப்பட்ட பிள்ளைகளில் நால்வர் கடந்த ஒரு மாதத்தில் இறந்துள்ளதை அறியமுடிகிறது.

குழந்தைகள் போஷாக்கு இன்மையால் பாதிப்படைவதற்கு குடும்பங்களின் தொழில்வாய்ப்பின்மை, வறுமை முக்கிய காரணமாக அமைகின்றன. போதிய சுகாதார அறிவு பெறாமையும் ஒரு காரணமாகிறது.

இவற்றிற்கான தீர்வுகள் எதுவும் எமது சக்திக்கு அப்பாற்பட்டவையல்ல. அரச, அரசசார்பற்ற அமைப்புகள் தீவிரமாகச் செயற்பட்டால் இக் குழந்தைகளில் 75வீதமானவர்களையாவது காப்பாற்ற முடியும்.

பிராந்திய சுகாதாரத் திணைக்களம் இந்நிலையில் உள்ள குழந்தைகளை தமது மருத்துவ தாதியர் ஊடாக இலகுவில் இனங்காண முடியும். அடையாளம் காணப்படும் குழந்தைகளுக்கு விசேடமான கண்காணிப்பு செலுத்த வேண்டும்.

அடையாளங் காணப்படும் குழந்தைகளின் குடும்ப நிலையை ஆராய்ந்து அவர்களுக்கான உடனடி உதவிகள் வழங்கல், தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க வழிகாட்டல் ஆகியமுறைகளால் இக் குடும்பங்களின் வறுமை நிலையை போக்கமுடியும். இவ்வகையான நடவடிக்கைகள் மூலம் இந்த 1500 முதல் 2000 வரையான குழந்தைகளையும் வாழ அனுமதிக்கப்போகிறோமோ அல்லது பார்வையாளராக இருந்து இவர்களது மரணத்தில் பங்காளிகளாகப் போகிறோமோ என்பதே இன்றைய கேள்வி ஆகும்.

இக் குழந்தைகளின் வாழ்வுக்காக திட்டமிட்டுச் செயலாற்ற முன்வருகின்ற அனைத்துத் தரப்பினருடனும் இணைந்து செயல்பட தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஆர்வம் கொண்டுள்ளது — இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[த]

## பல்கலைக்கழக மாணவருக்கு மண்ணெண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம், ஆக. 6

யாழ் பல்கலைக்கழகத்தில் உள்வாரியாகக் கல்வி பயிலும் மாணவருக்கு (விடுதியில் வசிப்போர் தவிர) தலா மூன்று லீற்றர் வீதம் மண்ணெண்ணெய் வழங்க முடிவாகியுள்ளது.

இன்றும், நாளையும் கலைப் பீட மாணவர்கள் சிரேஷ்ட மாணவ ஆலோசகர் காரியாலயத்திலும், விஞ்ஞான, மருத்துவபீட மாணவர்கள் நலச் சேவைகள் கிளையிலும் பணத்தைச் செலுத்தி இலக்க அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறும்—

எதிர்வரும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் குறிப்பிட்ட நேரத்தில் மண்ணெண்ணெய்யை பெற்றுக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தீவக மக்கள் பிரச்சினை தீர செயலகத்தில் புதிய ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஆக 6

தீவக மக்கள் தமது பிரச்சினைகளைத் தீர்க்க அலைவதைத் தடுக்கும் வகையில் யாழ். செயலகத்தில் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறைப் பிரிவுச் செயலர் பணிகளைக் கவனிக்க யாழ்ப்பாணப் பிரிவுச் செயலர் திரு. க. குணராசாவும்—

வேலணைப் பிரிவுச் செயலர் திரு. இளங்கோ விடுமுறையில் இருந்து திரும்பும் வரை அவரின் கடமைகளைக் கவனிக்க மாவட்டப் பிரதி ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கமும்— நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். செயலகத்தில் இயங்கும் இந்த இரு உதவி அரச அதிபர் பணிமனைகளுக்கும் சகல தீவகப்பகுதி கிராம சேவையாளர்களும் கிழமையில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய மூன்று நாட்களும் சமுகம் கொடுக்கவேண்டும் என்று உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

தீவக மக்கள் தமது பிரச்சினைகளை இந்த பணிமனைகளில் தெரிவிக்கலாம் என்று யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

[இ-3]

## நல்லூரில் இன்று

நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவகாலத்தை முன்னிட்டு ஆலயச் சுற்றாடலில் நான்காம் திருவிழாவான இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள் வருமாறு:-

★ கிழக்கு வாசல் முருகன் தண்ணீர்ப் பந்தலில் (மாலையில்) — சாரதா சச்சிதானந்தத்தின் இன்னிசைக் கச்சேரி

★ மேற்கு வீதியில் பிள்ளையார் ஆலய முன்றலில் (மாலையில்) — "கானகதா வாரிதி" பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் "பார்வதி தவம்" என்ற பொருளில் கந்தபுராண கதாப்பிரசங்கம்.

★ நல்லை ஆதீனத்தில்:- பி. ப. 2மணிக்கு - கந்தபுராணப்படிப்பு, பி. ப 3மணிக்கு —பௌராணிகர் மு. தியாகராசாவின் "முருக இலக்கியங்கள்" தொடர் விரிவுரை

(அ-30-126)

உ

நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

### அமைதியே நிலவ அருள்வான்

சிவனுக்குப் பிரணவப் பொருள் சொன்ன குமரன்
சூரனை வதைத்த சுடர்வடி வேலன்
பவவினை அறுக்கும் வல்லமைத் தலைவன்
பக்தர்க்கு இரங்கிடும் அருள்மிகு இறைவன்
தவநெறி ஓங்கும் நல்லையில் உறைபவன்
தமிழரின் தெய்வம் எனத்திகழ் முருகன்
அவனடி பணிவோம் அற்புதப் பாலன்
அமைதியே நிலவ் என்றுமே அருள்வான்!

— [illegible]

## ஒலிம்பிக் போட்டி முடிவு

லண்டன், ஆக. 6

ஒலிம்பிக் பந்தயங்களில் நேற்று முன்தினம் வரை நடைபெற்ற போட்டிகளின் முடிவுகளின்படி, முன்னணி வகிக்கும் நாடுகள் பெற்ற பதக்கங்களின் எண்ணிக்கை வருமாறு:-

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண். |
|---|---|---|---|
| சுதந்திர குடியரசுகளின் பொதுநல அமைப்பு | 33 | 28 | 20 |
| அமெரிக்கா | 20 | 26 | 22 |
| ஜேர்மனி | 17 | 14 | 23 |
| சீனா | 16 | 20 | 14 |
| ஹங்கேரி | 10 | 07 | 02 |
| ஸ்பெயின் | 10 | 01 | — |
| தென் கொரியா | 09 | 03 | 10 |
| பிரான்ஸ் | 07 | 05 | 13 |
| அவுஸ்திரேலியா | 06 | 08 | 09 |
| கனடா | 06 | 01 | 06 |
| இத்தாலி | 05 | 05 | 07 |
| ருமேனியா | 04 | 04 | 07 |
| பிரிட்டன் | 04 | 03 | 06 |
| கியூபா | 04 | 02 | 07 |
| ஜப்பான் | 03 | 07 | 07 |

## புனர்வாழ்வுக் கடனுக்கு பாதுகாப்புவரி அறவிடுவதா?

### ரத்துச் செய்ய வற்புறுத்து

ஒன்றிணைக்கப்பட்ட புனர்வாழ்வு புனர் நிர்மாண திட்டத்தின கீழ் வழங்கப்பட்ட புனர்வாழ்வுக் கடன்களுக்கு பாதுகாப்புவரி அறவிடுவதை உடன் நிறுத்தக் கோரி குரும்பசிட்டி சன்மார்க்க சபை யாழ் அரச அதிபர் ஊடாக நிதி திட்டமிடல் அமைச்சுக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

யாழ் மாவட்டத்தில் 1983 முதல் 1987 வரையான காலப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது ஏற்பட்ட சேதங்களுக்கு நிவாரணமாக மிகக் குறைந்த வட்டி வீதத்தில் வழங்கப்பட்ட இக் கடன்களுக்கு பாதுகாப்பு வரி அறவிடுவது, முழுக் முழுக்க அபத்தமான ஒரு நடவடிக்கை என்று அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிகக் குறைந்தளவு பாதுகாப்பு உத்தரவாதம் கூட இல்லாது வாழும் யாழ். மாவட்ட மக்களை குண்டு வீசியும், ஷெல் தாக்குதல் நடத்தியும் கொல்ல எமது மக்களிடமே பணம் அறவிடும் ஒரு நடவடிக்கையாகவே இதைக் கருத வேண்டியுள்ளது என்றும் —

எனவே புனர்வாழ்வுக் கடன்களுக்கு பாதுகாப்பு வரி அறவிடும் அநியாய நடவடிக்கையை உடன் ரத்துச்செய்ய வேண்டும் என்றும் அம் மகஜரில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

[த]

## பொதியை ஒப்படைத்தவருக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், ஆக. 6

கொம்படிப் பாதையில் கடந்த மாதம் பயணி ஒருவர் தவறவிட்ட பெறுமதிமிக்கப் பொதியை கண்டெடுத்து ஒப்படைத்த மோட்டார் சைக்கிள் சேவையில் ஈடுபடும் ஒருவர் கோண்டாவிலுள்ள யாழ். மாவட்ட செயலகத்தில் வைத்து அண்மையில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

நா. பாலச்சந்திரன் என்னும் இவர் முத்திரைச் சந்தி தனியார் போக்குவரத்து காரியாலயத்தின் ஊடாக மேற்படி பொதியை உரியவருக்கு வழங்கி இருந்தார்.

பொதி உரிமையாளர் வழங்கிய அன்பளிப்பை விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. வே. பாலகுமாரன் திரு. பாலச்சந்திரனுக்கு வழங்கி, அவரைப் பாராட்டினார். [ஒ]

## கொழும்பில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

றான படிவங்களை நிரப்பி ஒப்படைத்தவர்களும் புதிய படிவங்களை நிரப்பி ஒப்படைக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

[ஒ-த]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கில ஆசிரியர் போட்டிப் பரீட்சை

கொழும்பு, ஆக. 6

மாவட்ட சேவைத்திட்டத்தின் கீழ் ஆங்கில ஆசிரியர்களை தெரிவு செய்யும் 92 ஆம் ஆண்டுக்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை இம் மாதம் 24 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்ப வேண்டும் என்றும் —

இதற்கான விவரங்களை ஜூலை மாதம் 31 ஆம் திகதி வர்த்தமானியில் பார்க்கலாம் என்றும் — கல்விச் சேவைச் சபை செயலாளர் ஏ. எஸ். வீரரத்ன அறிவித்துள்ளார்.

## மரண அறிவித்தல்கள்

### CHELVATHY PERINPANAYAGAM

திருமதி செல்வதி பேரின்பநாயகம் நேற்றுக் காலமானார். அன்னார் காலஞ்சென்ற J.H.R. பேரின்பநாயகம் அவர்களின் அன்பு மனைவியும், டான், மாலினி, வசந்தி, நோயல் ஆகியோரின் அருமைத் தாயாரும், கமலினி, கருணா அழகரத்தினம், பென் குணரத்தினம், வசந்தா, ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற திரு. திருமதி C.P. தாமோதரத்தின் மகளும், கிருபை கினெல், அருள்நைல்ஸ், ஜெயம், நேசர், ஏமிபெர்னாண்டோ, எட்கார், தர்மதேவி நடராஜா, தங்கம்மேதர் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

நல்லடக்க ஆராதனை இன்று (06 - 08 - 92) பிற்பகல் 3 30 மணிக்கு 88, ஸ்ரேஷன் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் துண்டியில் உள்ள மெதடிஸ்த சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
பென் குணரத்தினம்.

[22061]

### இளையதம்பி இராசதுரை

(இளைப்பாறிய உதவி மதிப்பீட்டாளர் வருமான-வரிக் கந்தோர், கொழும்பு]

தெல்லிப்பழையை சேர்ந்த இளையதம்பி இராசதுரை 1 - 8 - 92 சனிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ் சென்ற இளையதம்பி சேதுப்பிள்ளை தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற ஆயுள்வேத வைத்தியர் செல்லத்துரை தங்கப்பிள்ளையின் அன்பு மருமகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், செல்வி, சாந்தி (Finance and Land Sales Ltd, Colombo - 3) செல்வி கௌரி (Ford Rhöders Thronton and company, Colombo - 3), ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் தவிர்க்க முடியாத காரணத்தால் 5-8-92 புதன்கிழமை நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஸ்ரேசன் றோட், கன்னாகம்.
இ. கமலாதேவி. [மனைவி]

[4935]

### திருமதி இந்திரா செல்வரெட்ணம்

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் லண்டனில் வசிப்பவருமான திருமதி இந்திரா செல்வரெட்ணம் 02- 08- 92 ல் காலமானார்.

இவர் நெவில் செல்வரெட்ணத்தின் அன்பு மனைவியும், புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த காலம் சென்றவர்களான நாகநாதர் பொன்னையா [முன்னாள் தலைமை ஆசிரியர்], செல்லம்மா ஆகியோரின் அன்பு மகளும், உடுப்பிட்டியைச் சேர்ந்த காலம் சென்ற திரு. A. D. செல்வரெட்ணம் [இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்], இராசமணி ஆகியோரின் அன்பு மருமகளும், திருமதி கமலா செல்வராசா, சகுந்தலா, ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி Bergin (லண்டன்], திரு. G. N. செல்வரெட்ணம், திரு. யோ. சா. செல்வராசா ஆகியோரின் மைத்துனியும், திரு A. P. Bergin (லண்டன்], திருமதி மலர் செல்ரெட்ணம் [கொழும்பு] ஆகியோரின் அன்பு சகலியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் 10- 08- 92 ல் லண்டனில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றேன்.

தகவல்:
308, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(Dr சம்பந்தன் சிகிச்சை நிலைய அருகாமை)
திரு. யோ. சா. செல்வராசா (இளைப்பாறிய அதிபர்) (மைத்துனர்)

(22059)

### பத்தலோமை யோசேப்பு

பத்தலோமை யோசேப்பு [இளைப்பாறிய விவசாய விசாலிப்புசேவையாளர்] 4 - 8 - 92 இல் காலமானார். அன்னார் திருமதி மே மி யோசேப்பு [இளைப்பாறிய அதிபர், மிருசுவில் றோ. க. பாடசாலை] அவர்களின் அன்புக் கணவரும் றெசில்டா [கனடா], றொபின்சன் [ஜேர்மனி], நிமல்டா [சென். அன்ரனி ம. வி கொள்ளுப்பிட்டி], சுசில்டா [ஜேர்மனி] ஆகியோரின் அன்புத் தந்தையும், அன்ரன் [கனடா], மித்திரா [ஜேர்மனி], நிரஞ்சன் [றிச்சார்ட் பீரிஸ், கொழும்பு], கிறேசியன் (ஜேர்மனி] ஆகியோரின் அன்பு மாமனாரும் யூலி, லக்ஷிகா ஆகியோரின் பாட்டனாரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
திருமதி அ. ரூசை மரியதாசன் [மைத்துனி]
ஜீவோதயம் கண்டி வீதி, மிருசுவில்.

[5220]

# ஆலய உற்சவங்கள்

யாழ்ப்பாணம், ஆக. 6

அளவெட்டி, நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் இம் மாதம் 12 ஆம் திகதி புதன்கிழமை காலை 10-30 மணிக்கு நடைபெறும். கொடியேற்றத்துடன் தொடங்கி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும்.

21 - ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும் 22 - ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

[அ-51]

★ ★ ★

ஏழாலை தெற்கு வசந்தபுரம் வசந்த நாகபூசனி அம்மன் ஆலயத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரலட்சுமி பூசை ஆரம்பமாகும்.

விரதம் அனுஷ்டிப்பவர்களுக்கு காப்பு கட்டப்படும்.

★ ★ ★

மடுத்திருப்பதியில் ஆவணி வருடாந்தத் திருவிழா இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது.

உற்சவ காலத்தில் தினமும் காலையில் திருப்பலிகளும், மாலையில் செபமாலை நற்கருணை ஆசீர் வாதம் ஆகியனவும் இடம்பெறும்

(அ-51-154-30]

## தொடர்ந்து...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

திங்கட்கிழமை கரடியனாறிலும், செவ்வாய்க்கிழமை வவுனியாவிலும், புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் மொத்தம் 29 படையினர் கொல்லப்பட்டது தெரிந்ததே.

(இ-5)

## ஸ்ரீலங்கா கடற்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நுழைந்தார்கள் என்பதான சாக்குப் போக்குப் பேரில் சிறை பிடிக்கப்பட்டு காவலில் வைக்கப்பட்ட பின்னர் சித்திரவதை செய்யப்படுவதாக எம். பிக்கள் சுட்டிக் காட்டினார்கள்.

சில சந்தர்ப்பங்களில் தமிழக மீனவர்களின் படகுகள் இலங்கைக் கடற்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்ட பின்னர், அவர்களை படையினர் கொன்று விட்டதாகவும் தி. மு. க வைச் சேர்ந்த எம். பி. ஒருவர் ராஜ்ய சபையில் தெரிவித்தார்.

1974 இல் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையை இலங்கைக் கடற்படையினர் மீறி வருகின்றனர் என்றும்—

இவ்விஷயத்தை இலங்கை அரசின் கவனத்துக்குக் கொண்டு சென்று இராமேஸ்வரம் மீனவர்களை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்— இந்திரா காங்கிரஸ் எம். பியான திரு. தங்கபாலுவும், அ. தி. மு. கவின் எம். பியான திரு. பி. ஜி நாராயணனும் வற்புறுத்தினார்கள்.

SHAMROCK
யாழ். சுண்டிக்குளி.
Pure/App.
திரு. P. கமலசிங்கம்
B.Sc. (Hons)
விடுமுறை விசேட வகுப்புகள்
93-
முக்கோணியின் பண்புகள்.
முட்டிய கோல்கள்.
செவ்வாய், வியாழன்
8 00 — 10 00
94-
ஆரம்பமாகியுள்ளது.
சனி, ஞாயிறு
12-00 — 2-00
[22046]

# தபால்கள் தாமதம்

பரந்தன், ஆக. 6

கொழும்பு மற்றும் வெளி மாகாணங்களிலிருந்து வரும் தபால்கள் தமக்கு உடனுக்குடன் விநியோகம் செய்யப்படுவதில்லை என்று பரந்தன் பகுதி மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

இந்தத் தாமதத்தினால் இப்போது நடைபெறும் ஜி சீ. ஈ. உயர்தர பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் உரிய வேளையில் கிடைக்கவில்லை. அதனால் பரீட்சார்த்திகள் பெரிதும் சிரமப்பட்டனர்.

கிளிநொச்சித் தபாலகத்திலிருந்து அனுமதி அட்டைகள் நேரகாலத்துடன் பரந்தனுக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் பரந்தன் பகுதி பரீட்சார்த்திகளுக்கு அவை உரிய நேரத்தில் கிடைக்கவில்லை.

[அ-20]

## தபால் பொதி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிடைத்த பொருள்கள் விவரப் பட்டியலில் 250 தபால் பொதிகளே கப்பலில் எடுத்து வரப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நேற்று கப்பலில் இருந்து தபால் பொதிகள் இறக்கப்பட்ட போது 462 பொதிகள் எடுத்து வரப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

[இ-3-5]

## நன்றி நவிலல்

### மிருதங்க அரங்கேற்ற வைபவம்

செல்வன்

### தர்மராஜா திருக்குமார்

சென்ற 01 - 08 - 1992 இல் நல்லை ஆதீனத்தில் இனிது நடைபெற்ற எமது புத்திரன் செல்வன் திருக்குமாரின் மிருதங்க அரங்கேற்ற வைபவ நிகழ்ச்சிகளை தலைமை தாங்கி நெறிப்படுத்திய வடக்கு - கிழக்கு மாகாணசபையின் யாழ் மாவட்டப் பிரதி ஆணையாளருக்கும், பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டு சிறப்பித்த யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், யாழ். பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி, யாழ். பல்கலைக் கழக நுண்கலைப் பிரிவுத் தலைவர் ஆகியோருக்கும், இவ்வைபவத்தினை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்து அணிசெய்த அன்னையர்க்கும், ஆசியுரை வழங்கிக் கௌரவித்த நல்லை ஆதீன முதல்வர் மற்றும் பெரியோர்களுக்கும், மதிப்பீட்டுரை நிகழ்த்திய கலைஞருக்கும் வைபவத்தில் திரளாகக் கலந்து கொண்டும், ஆசிவழங்கியும், பல்வேறு விதத்திலும் உதவிகள் புரிந்தும், கௌரவித்த பெரியோர்கள், கலைஞர்கள், ரசிகர்கள், அலுவலக நண்பர்கள், பாடசாலை நண்பர்கள், உறவினர்கள் அனைவர்க்கும் எமது அன்புகலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திரு. திருமதி தர்மராஜா குடும்பத்தினர்.
வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.

(20057]

## 2ஆவது நினைவு தினம்



தோற்றம் : 20 — 04 — 1919

மறைவு : 31 — 07 — 1990

திதி : 06 — 08 — 1992

சரசாலையைப் பிறப்பிடமாகவும்
நந்தாவில் - கொக்குவிலை வசிப்பிடமாகவும்
வாழ்ந்த
அமரர்

### இளையதம்பி ஈஸ்வரபாதம்

[ இளைப்பாறிய பொலீஸ் இன்ஸ்பெக்டர் ]

குடும்பத்தின் ஒளி விளக்காக
சமூகத்தின் நற்றலைவனாக
எல்லோர்க்கும் வழிகாட்டியாக
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
உத்தமனார் தாள் சேர்ந்த
ஈராண்டு நினைவு நாளாயின்று
எங்கள் உள்ளக் கோவில்களில்
அன்புமலர் தூவித் துதிக்கின்றோம்.

திருமதி வ. ஈஸ்வரபாதம், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
நந்தாவில், கொக்குவில்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 06-08-92 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org